Tamil/தமிழ்

AEC Australian Electoral Commission

# நிதானமாக நின்று சிந்திக்கவும்

ஒரு 'ஃபெடரல்' தேர்தலின் போது வாக்களிக்கும் செயல்முறையைப் பற்றி நிறைய விடயங்கள் சொல்லப்பட்டும், எழுதப்பட்டும் வருகின்றன. **அதில் சில பிழையானவையாகவோ, தவறாக வழிநடத்துபவையாகவோ இருக்கலாம்.**

தேர்தல் செயல்முறையைப் பற்றி நீங்கள் பார்க்கும், கேட்கும் அல்லது வாசிக்கும் விடயங்களின் உள்ளடக்கம் மற்றும் மூலத்தை நிதானமாக நின்று சிந்திக்கவும்.

AI- மூலம் உருவாக்கப்பட்ட வாசகம், படங்கள், வீடியோ மற்றும் ஆடியோ ஆகியன எங்கு வாக்களிக்க வேண்டும், வாக்குச் சீட்டுகளை எவ்வாறு பூர்த்தி செய்வது அல்லது இந்த செயல்முறை ஏன் நம்பகரமானதாக இருக்காது என்பன பற்றி உங்களை ஏமாற்ற முயற்சிக்கப் பயன்டுத்தப் படலாம். **யார் வேண்டுமானாலும் பாதிக்கப்படலாம்.**

எதையும் ஆராய்ந்து நோக்கும் பாதுகாப்பான நிலைப்பாட்டை மேற்கொள்ளுங்கள். விடயங்களைச் சரிபார்த்துக் கொள்ளுங்கள் அல்லது புறக்கணிக்கணியுங்கள், ஆனால் அவற்றைப் பகிரவோ அல்லது மறுபதிவு செய்யவோ வேண்டாம். நீங்கள் பார்த்த இடத்தில் அதைப் பற்றி முறையிடலாம். நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்கும் இவ்வாறு செய்ய ஆதரவுதவியளியுங்கள்.

ஆஸ்திரேலியா உலகில் மிகவும் நம்பகரமான தேர்தல் முறைமைகளில் ஒன்றைக் கொண்டுள்ளது. இது வாக்காளர்களுக்கு உரித்தானது, மற்றும் அதைப் பாதுகாக்கும் பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது

**நம்மிடம் இருப்பதை இழக்கத் துணிய வேண்டாம்.**

## உள்ளடக்கத்தை சரிபாருங்கள்

**பின் வரும் விடயங்கள் உள்ளனவா என்று பாருங்கள்:**

- அதிர்ச்சி, கோபம், மன எழுச்சி போன்ற வலுவான உணர்வுகளை ஏற்படுத்தும் வார்த்தைகள்
- அனைத்து விருப்பத் தெரிவுகளுக்கும் பதிலாக ஒரு சிறிய எண்ணிக்கையிலான தெரிவுகள் மட்டுமே வழங்கப்பட்டிருத்தல்
- பொறுப்பேற்க வேண்டிய பலர் அல்லது குழுக்கள் இருக்கும் பொழுது, ஒரு குறிப்பிட்ட குழுவை அல்லது நபரை மட்டும் குற்றம் சாட்டுதல்
- ஒரு விவாதத்தில் கவனம் செலுத்துவதை விட தனிப்பட்ட ஒரு நபரைத் தாக்குதல்.

## மூலத்தை சரிபாருங்கள்

**உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்:**

- தகவல் எங்கிருந்து வந்தது? இது நம்பகரமான இடத்திலிருந்து வந்ததா?
- அது ஆஸ்திரேலியாவில் இருந்து வந்ததா அல்லது வெளிநாட்டில் இருந்து வந்ததா?
- அது AI ஆக இருக்க முடியுமா? AI தொழில்நுட்பமானது தவறான வாசகம், படங்கள், வீடியோ மற்றும் ஆடியோ போன்றவற்றை உருவாக்குவதை எளிதாக்குகிறது.
- அது ஏன் வெளியிடப்பட்டது? உண்மையில்லாத ஒன்றைப் பற்றி யாராவது உங்களை நம்ப வைக்க முயற்சிக்கக்கூடும் என்பதற்கு ஏதேனும் காரணம் உள்ளதா?

## எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடுங்கள்

**பின்வருவன பற்றிய உண்மையான தகவல்களைப் பெறுங்கள்:**

- எப்போது வாக்களிக்க வேண்டும்
- வாக்குகள் எப்படி எண்ணப்படுகின்றன
- முடிவு எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றது
- AEC வாக்குகளை எவ்வாறு பாதுகாப்பாக வைத்திருக்கின்றது.

உதவிக்குறிப்புகளைப் பெறுங்கள்

**aec.gov.au** 13 23 26

எங்களிடமிருந்து நேரடியாகத் தகவல்களைப் பெற எங்களைத் தொடருங்கள்

'கன்பெரா'-விலுள்ள தேர்தல் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்டது

Authorised by the Electoral Commissioner, Canberra

25-2108